உடனடி வெளியீட்டுக்காக

## புது தகவல் 2: ப்ராம்ப்ட்டன் மாநகர நிர்வாகமானது, கோவிட் – 19 (COVID-19) வைரஸ்-க்கு எதிரான கூடுதல் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 12, 2020) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது கோவிட்-19 (COVID-19) வைரஸ் பற்றிய கூடுதல் கவனம் எடுத்து பீல் ப்பளிக் ஹெல்த் (Peel Public Health) தரும் ஆலோசனைகளை தொடர்ந்து பின்பற்றுகிறது. மிக சமீபத்திய தகவல்கள் கிடைக்குமிடம்: www.peelregion.ca/coronavirus. இந்த நிலைமையை இந்த நகரம் தொடர்ந்து கூர்ந்து கண்காணித்து வருவதுடன், கொடுக்கப்படும் சேவைகள் அல்லது நிகழ்ச்சி அமைத்தலில் ஏதேனும் மாற்றங்கள் பற்றிய புதிய தகவல்களை குடியிருப்பு வாசிகளுக்கு தெரிவிப்பார்கள்.

நகரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் தனி நபர்கள் பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார பழக்கங்களைக் (recommended hygiene practices)கடைப்பிடிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

- *சுய கண்காணிப்பு (self-monitor), செய்துகொள்ளுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டால், உங்களுக்கு உடல்நலப்பராமரிப்பு அளிப்பவர் கூறும் ஆலோசனைகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.*
- *உங்கள் கைகளை சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு கழுவுங்கள் அல்லது ஆல்கஹால் அடிப்படையிலான கை சானிட்டைசரை உபயோகிங்கள்.*
- *கூடுமானவரையில், கண்கள், வாய் மற்றும் மூக்கினை கைகளால் தொடுவதைத் தவிருங்கள்.*
- *நோய் கொண்ட மக்கள் மற்றும் அவர்களின் பொருட்களைத் தொடுவதை தவிருங்கள்.*
- *நீங்கள் இருமும்போதும், தும்மும்போதும் அதை ஒரு டிஷ்ஷூ பேப்பரால் மறையுங்கள். உங்கள் கைவசம் ஒரு டிஷ்ஷூ பேப்பர் இல்லை என்றால், உங்கள் முழங்கை மடிப்பில் இருக்கும் ஆடையில் முகம் புதைத்து தும்முங்கள் அல்லது இருமுங்கள்; உங்கள் கைகளை உபயோகிக்க வேண்டாம். இருமியபின்னரோ அல்லது தும்மிய பின்னரோ உங்கள் கைகளைக் கழுவுங்கள்.*
- *ஆரோக்கியமான வாழ்க்கைப் பாவனையை கடைப்பிடியுங்கள்; இதில் ஆரோக்கியமான உணவுமுறை, உடற்பயிற்சி மற்றும் போதுமான உறக்கம் ஆகியவை உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும்.*
- *சளிக்காய்ச்சலுக்கான ஒரு தடுப்பு ஊசி மருந்து செலுத்திக்கொள்ளுங்கள். கோவிட் 19 (COVID-19 ) வைரஸ்-ஐ காட்டிலும் சளிக்காய்ச்சல் உங்களைப் பீடித்து உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து பிற கிருமிகளின் தாக்கத்திற்கு வழி வகுக்கும்.*
- *உங்களை நீங்களே தனிமைப்படுத்திக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டால், உங்களுக்கு ஆரோக்கியப் பராமரிப்பு அளிப்பவரின் ஆலோசனையை பெறவும்.*

BRAMPTON Service and Information Update

**நிகழ்ச்சிகள்**

நகரில் வரவிருக்கும் எந்த ஒரு கூட்டம் கூடும் நிகழ்விலும் ஆபத்து மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளுமாறு பீல் ப்பளிக் ஹெல்த் ( Peel Public Health) அமைப்பு, நகர நிர்வாகத்தை கேட்டுக்கொண்டுள்ளது. ப்ராம்ப்ட்டன் நகரின் அவசர நிலை மேலாண்மை அலுவலகத்திற்கு ( Brampton’s Emergency Management Office (BEMO)) பொதுமக்கள் சுகாதாரத் துரையிலிருந்து அவ்வப்போது தொடர்ந்து புதிய தகவல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன; மற்றும் பெறப்படும் எந்த ஒரு ஆலோசனை அல்லது அறிவுறுத்தலையும் நடைமுறைப்படுத்த நகரத்தின் பல துறைகளும் பணியாற்றி வருகின்றன.

*250 பேர்களுக்கும் அதிகமான மக்கள் கூடும் நிகழ்ச்சிகள் தள்ளி வைக்கப்படுகின்றன. இம்மாதிரியான இடங்களை வாடகைக்கு விடும் அமைப்புக்கள் இப்படியான அதிக மக்கள் கூடும் நிகழ்ச்சிகளை தள்ளிப்போடுமாறு ஆலோசனை கொடுக்கப்படுகின்றன மற்றும் உற்சாகமளிக்கப்படுகின்றனர். இந்நகரின் மேயரும் மன்ற உறுப்பினர்களும் இதற்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள் மற்றும் இப்படியான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மாட்டார்கள்.*

*250 பேர்களுக்கும் குறைவான மக்கள் கூடும் நிகழ்ச்சிகளில் நகர நிர்வாகம் விழிப்புணர்வுக்கான அறிவிப்பினை வைப்பார்கள்; பீல் பப்ளிக் ஹெல்த் சுகாதார அமைப்பினர் சிறந்த சுகாதாரப் பழக்கங்கள் பற்றிய அறிவிப்பு பலகைகளை இம்மாதிரியான இடங்களில் வைப்பார்கள்.*

**பொழுதுபோக்கு நிகழ்ச்சி அமைத்தல் & மார்ச் மாத இடைவேளை**

உங்களுக்கு நீங்களே தனிப்படுத்திக்கொள்வது அவசியம் என்னும் நிலை இருந்தால் தவிர, உங்கள் உடல் நலன் நன்றாக இருக்கும்போது நீங்கள் வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே இருக்குமாறு பீல் பப்ளிக் ஹெல்த் சிபாரிசு செய்வதில்லை. எந்த ஒரு நோய்த்தன்மையைப் போலவே, உங்களுக்கு உடல்நலம் இல்லை என்றால் வீட்டிலேயே இருந்துவிடுங்கள் மற்றும் நோய் கொண்டவர்களுடன் தொடர்பினைக் கைவிடுங்கள். இந்த ஆலோசனையைக் கடைப்பிடிப்பதில், மார்ச் மாத இடைவேளையின்போது நகரின் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டமிடல் அதன் போக்கில் திட்டமிட்டபடி தொடரும்.

இப்போதிலிருந்து திங்கள்கிழமை வரை குழந்தைகளுக்கான முகாமில் இருந்து தங்கள் குழந்தைகளை விலக்கிக்கொள்ள அவர்களின் பெற்றோர் முடிவு செய்வார்களேயானால் விலக்கத்திற்கான கட்டணம் $50 ஐ ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு துறை தள்ளுபடி செய்கிறது. திங்கட்கிழமைக்குப் பின்னர் விலக்கம் செய்தால் நகர நிர்வாகம் அதற்கேற்ற விகிதத்தில் கட்டணம் வசூலிப்பார்கள். மேலும் தகவல்களுக்கு அணுகவும்: recconnects@brampton.ca .

**அவசரகால இயக்க செயல்களுக்கான மையம் – ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால செவிசாய்ப்புத் திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படுகிறது**

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் ஆலோசனையை பின்பற்றுகிறது. நகர நிர்வாகம், கோவிட்-19 (COVID-19) பற்றிய அதிகாரபூர்வமான அவசர நிலை எதையும் அறிவிக்கவில்லை என்றாலும், ப்ராம்ப்ட்டன் அவசரகால மேலாண்மை அலுவலகமானது (Brampton's Emergency Management Office) ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால செவிசாய்ப்புத்திட்டத்திற்கான "நிலை 2" ஐ செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. முன் கூட்டிய தடுப்பு மற்றும் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான, குறிப்பான ஆதாரவளங்களை அர்ப்பணிப்பு செய்ய, அதிவிரைவான செவிசாய்ப்பு கொடுக்க இந்த முடிவு ஏதுவக்குகிறது.

**கோவிட்- 19 (COVID-19) மதிப்பீட்டு மையம் – பீல் மெமோரியல்**

வில்லியம் ஆஸ்லர் ஹெல்த் சிஸ்டம் அமைப்பானது (William Osler Health System) கோவிட் - 19 (COVID-19) மதிப்பீட்டு மையத்தினை பீல் மெமோரியல் மையத்தில் (Peel Memorial Centre) திறந்திருக்கிறார்கள்; இந்த ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்கான மையமானது கோவிட் - 19 (COVID-19) வைரஸ்-க்கான சாத்தியமான டையாளங்களை அனுபவிக்கின்ற மக்களை நோய்கண்டறிந்து மதிப்பீடு செய்யவே ஆகும். ஆஸ்லர் மதிப்பீட்டு மையம் (Osler Assessment Centre) என்பது உடனடியாக மருத்துவம் அளிக்கும் மையம் கிடையாது. மதிப்பீடு மையத்தின் அலுவல் நேரம் பிற்பகல் 2 மணி முதல் மாலை 8 மணி வரையாகும்; வாரம் ஏழு நாட்களும் வேலை செய்யும். இந்த வசதியமைப்பானது பீல் மெமோரியல் (Peel Memorial) மையத்தில், தனிமைப்படுத்திய ஒரு பகுதியாகும் மற்றும் இதே மையத்தில், அவசரப் பராமரிப்பு மையத்திற்கு அல்லது வெளி நோயாளிகள் பிரிவுக்கு வரும் நோயாளிகளுக்கு பாதிப்பு உண்டாக்காது. நோய்ப்பராமரிப்பு பெறுவதற்கு ஆஸ்லர் (Osler) தொடர்ந்து ஒரு பாதுகாப்பான இடமாகவே இருக்கும்.

**மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்களிடமிருந்து செய்தி**

"*ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது கோவிட்-19 (COVID-19) வைரஸ் பற்றிய கூடுதல் கவனம் எடுத்து, நமது குடியிருப்புவாசிகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க, கடுமையான செயல்படிகளை எடுத்து வருகிறது. பேருந்துகள் மற்றும் அவற்றுக்கான வசதியமைப்புக்களைத் தூய்மைப்படுத்தல் மற்றும் கிருமிநாசினி தெளித்தல் ஆகியவை அடிக்கடி செய்யப்படுகின்றன.கூடவே,அதிக மக்கள் கூடும் நிகழ்ச்சிகளை தள்ளிப்போட உற்சாகம் கொடுப்பதுடன் அப்படியான இடங்களை வாடகைக்கு கொடுப்போரையும் இதையே செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். மாமன்ற உறுப்பினர்களும் நானும் இதற்கு முன்மாதிரியாக இருந்து அதிகமானோர் கூடும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மாட்டோம். கோவிட் – 19 (COVID-19*) பரவுவதைக் கட்டுப்படுத்த, *பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) அமைப்பு*

*சிபாரிசு செய்யும் சுகாதார முறைக்கான பழக்கங்களை பின்பற்றுமாறு நான் குடியிருப்பு வாசிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.*"

**மேலும் தகவல்கள்:**

- பீல் ப்ப்ளிக் ஹெல்த் (Peel Public Health) – நாவல் கொரோனா வைரஸ் (Novel Coronavirus)கோவிட்-19 (COVID-19)
- ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் – சேவைத்தகவல் புதுப்பிப்பு 1
- ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நல் வாழ்வுக்கான பீல் மெமோரியல் மையம் (Peel Memorial Centre for Integrated Health and Wellness) இல் இருக்கும் கோவிட் – 19 (COVID-19 ) மதிப்பீட்டு மையம்
- ஒன்ட்டேரியோ பிரதேசம்: சுகாதார அமைச்சகம் – நாவல் கொரோனா வைரஸ் (Novel Coronavirus)கோவிட்-19 (COVID-19)
- கனடா நாட்டு அரசாங்கம் (Government of Canada) - கொரோனா வைரஸ் (Novel Coronavirus)கோவிட்-19 (COVID-19) புது தகவல்
- Wஉலக சுகாதார நிறுவனம் (World Health Organization) – கொரோனா வைரஸ் (Novel Coronavirus)கோவிட்-19 (COVID-19) புது தகவல்

-30-

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் மாநகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca